அருள்மிகு

# விசுவேசர் புராணம்





வட்டுக்கோட்டையூர்
புலவர்மணி பண்டிதர் திரு.க. மயில்வாகனனார்

உ

சிவமயம்

விசாலாட்சி சமேத விசுவநாதசுவாமி துணை.

வட்டுக்கோட்டையூர்,

புலவர்மணி, பண்டிதர், திரு.க..மயில்வாகனனார்

இயற்றிய

# வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள்மிகு விசுவேசர் புராணம்

குறிப்புரையுடன்

வெளியீடு

வட்டுக்கோட்டை

அருள்மிகு விசுவேசர் புராணம்

பதிப்பாளர் வட்டம்

வட்டுக்கோட்டை

# பதிப்புரிமை

நூலின் பெயர்: வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள்மிகு விசுவேசர் புராணம்

நூலாசியரியர்: புலவர்மணி, பண்டிதர், திரு.க.மயில்வாகனனார்

நூலை வெளியிடுவோர்: அருள்மிகு விசுவேசர் புராணம் பதிப்பாளர் வட்டம், வட்டுக்கோட்டை.

பதிப்புரிமை: நூலாசிரியருக்கு.

படிகள்: 200

பக்கங்கள்: 400

வெளியீடு: விஷு ஆண்டு மார்கழி கஉ (2001.12.27)

அச்சிட்டோர்: யாழ் கற்பகவிநாயகர் அச்சகம், யாழ்ப்பாணம்.

முகப்பு ஓவியம் : கலைமகன்

விலை 400/=



சிவபிரான்

சிவமயம்

# வெளியீட்டுரை

சிந்துவெளி நாகரிகம் சிவ வழிபாட்டைக் களமாகக் கொண்டு அதனைப் பெரிதும் விதந்து பேசும். சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சைவர்கள், ஏனைய கடவுளரையும் சிவ மூர்த்தங்களாகவே கருதினர். சிந்து நாட்டு மக்கள், தொன்மைச் சிறப்பும் நாகரிக மேம்பாடும் வாய்ந்தவர்கள், அவர்களில் ஒரு சாரினர், புலம் பெயர்ந்து ஈழத்து வட்டூரில் குடியேறினர். தாம் வதியுமிடத்தில் சிவனாருக்குக் கோயில் எடுத்தனர். அவர் ஈங்கு அருளாட்சி புரிந்து வருகின்றார்.

அவ்வூர் மக்களுள், சித்தர் நிலை எய்தியவர், யாழ் நாட்டு நல்லைத் தெய்வேந்திர முதலியின் மரபில் வந்த சிவசித்தர்அப்பா முதலி அவர்கள். அவரால் பேணப்பட்ட தலமே விசுவேச்சரம் என்று பேசப்படுகின்றது. விசுவேச்சரத்தின் பெருமையை, அருளாட்சித் திறத்தை, வரலாற்றுச் சிறப்பை எல்லாம் எடுத்து இயம்புவதே அருள்மிகு விசுவேசர் புராணமாகும்.

இந்நூல், தலமும், தலஞ்சார்ந்த ஊரும், அதன் வளங்களான கலைவளம், கலாசார வளம், மக்கள் வாழ்வைப் பயனுளதாக்கும் பத்தி வளம் எனப் பல்வேறு வளங்களை உள்ளும் புறமுமாக ஆராய்ந்து வெளியிடுகின்றது. அன்றியும், புராணமரபினைப் பேணும் தல புராணப் பெற்றியும் கொண்டது. சுருங்கக் கூறின், கல்வியால் அமைவது ஒழுக்கம்; ஒழுக்கத்தின் விளைவு தெய்வப் பேறு; அது சிவகதிக்கு இட்டுச் செல்லும். இதனை,

"மன்னு சீர்விசு வேசர்தம் மாக்கதை
முன்னும் அன்பின் மொழிந்தவர் கேட்டவர்
இன்னல் நீங்கி நெடிதிங் கிருந்துபின்
துன்னி வானஞ் சிவகதி துய்ப்பரே"
(செய்-5)

என்னும் நிறை மொழியால் ஆணையிட்டுக் கிளந்த மந்திரமாகத் தந்துள்ளார் நூலாசிரியர். அவர் தல வரலாற்றுடன், யாழ் நாட்டின் தொன்மை வன்மைச் சிறப்புக்களையெல்லாம் வரலாறாக இயம்பும் பாங்கினை நூலைப் பயில்வார் அறிந்தின்புறுவர். ஆசிரியர் தம்

உள்ளத்திரையில் நிழலாடிய அனைத்து விடையங்களையும், ஒருங்கியைத்து, ஆற்றொழுக்கு நடையில், சுவை விஞ்சும் கவிதைகளாகத் தந்துள்ளார். மேலும் வேதாந்த சித்தாந்த உண்மைகளை மிகத் தெளிவாக இலகு நடையில் விளக்கியுள்ளார்.

கோயில்மாநகரம் வட்டூரின், நடுவண் அமைந்துள்ளது விசுவேச்சரம். அதனைச் சூழ்ந்துள்ள ஏனைய கோயில் மூர்த்திகளையெல்லாம் பாடிப்பரவிச் செல்லும் பான்மையைப் பத்தியாற்றுப் படையாகக் கண்டின்புறலாம்.

ஒரு சமூகம், உயர்வு உறுதற்குப் பல்வேறு வளங்கள் தேவை, அவ்வளங்களையெல்லாம் உணர்த்தும் வகையில் கலைவளம், ஞானவளம் போல்வனவற்றை ஆசிரியர் தமக்கு இயல்பாகவே அமைந்துள்ள மொழியாற்றல், கற்பனை வளம், அறிவனுபவம், நுட்பம் முதலியவற்றால் ஓர்ந்துணர்ந்து பாடியமைத்துள்ளார்.

மக்களுக்குப் பயன்தரும் இந்நூல் அண்ணளவாகப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன், உதயன், சஞ்சீவி இதழ்களின் பிரதம ஆசிரியர் திரு.வ.கானமயில்நாதன் தலைமையில் மங்கள வாழ்த்துப் பாடலுடன் தொடங்கி அருள்மிகு விசாலாட்சி சமேத விசுவேசப் பெருமான் திருவடிகளில் சாத்தி அருச்சிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

நாட்டின் நிலைமை காரணமாக அச்சுவாகனம் ஏற்றப்படாமல் கிடந்த இந்நூல், சிவத்தமிழ் வித்தகர், மூதறிஞர், பண்டிதமணி, சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களை, காப்பாளராகவும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னைநாள் விரிவுரையாளர் திரு.அ.அரியரத்தினம் அவர்களைத் தலைவராகவும் கொண்ட அருள்மிகு விசுவேசர் புராணம் பதிப்பாளர் வட்டத்தினரின். அரிய முயற்சியால் வெளிவருகின்றது. வரலாற்றுக் கருவூலமாகப் பேணப்பட வேண்டிய இது பத்தர்களுக்குப் பத்திப்பனுவலாகவும், வரலாறு தேருநர்களுக்கு சிறந்த இதிகாசமாகவும், பௌராணிகர்களுக்கு, விழுமிய புராணமாகவும், காப்பியப்பிரியர்களுக்கு நவரசப் பெட்டகமாகவும், மிளிர்கின்றது. மேலும், சங்கப் புலவோர், கம்பநாடர், சேக்கிழார், கச்சியப்பர் முதலியோர்களை முன்னிலைப்படுத்திக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.

விசுவேசர் புராண ஆசிரியர் புலவர்மணி பண்டிதர் க. மயில்வாகனனார், ஈழத்தில் வாழும் புகழ்பூத்த அறிஞர் வரிசையில் ஒருவர் என்பதை இங்கு குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

நூலை இனிது படித்து அருளாசி, நயப்புரை, ஆய்வுரை, சிறப்புப் பாயிரம் முதலியன வழங்கி சிறப்பித்த சமயப்பெரியார்களுக்கும், செந்தமிழ்ப் புலமைச் சான்றோர்களுக்கும் அச்சிட்டுதவிய யாழ் கற்பக விநாயகர் அச்சக முதல்வருக்கும், மற்றும் பல்லாற்றானும் உதவி நல்கிய அனைவருக்கும் நன்றியும் வணக்கமும் செலுத்துவதுடன்,

நூலாசிரியருக்கு உறுதுணையாக இருந்து ஊக்குவித்தவரும் அண்மையில் இறைபதம் புக்கவருமாகிய வாழ்க்கைத் துணைவியார் பத்மாசனி அம்மையாரையும் நினைவு கூருகிறோம்.

ஒவ்வொரு சைவசமயிகள் இல்லங்களிலும், விசுவேசர் புராணம் இருந்து அருளொளி விரிக்க வேண்டும் என்று அருள் மிகு விசாலாட்சி சமேத விசுவேசப் பெருமான் திருவடிகளை ஏத்துகின்றோம்

வணக்கம்

சுபம்

பண்டிதர்
ம.ந.கடம்பேசுவரன்
இணைச் செயலாளர்
சார்பில்

சிவன்கோயில் வளாகம்
வட்டுக்கோட்டை
2001.11.20

உ

சிவமயம்

குருபாதம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இரண்டாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள் வழங்கிய**

# அருளாசி

வட்டுக்கோட்டைப்பதியில் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரியும் விசாலாட்சி சமேத விசுவேசர் தலபுராணத்தை, பண்டிதர்.க மயில்வாகனனார் எழுதி வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயத்தின் வரலாற்றைக் கூறும் நூல் தலபுராணம் எனப்படும். அது ஆலயத்தின் வரலாற்றை மட்டுமன்றி நாட்டினுடையதும் மக்களினுடையதும் வாழ்வியல் முறைகளையும் வகுத்துக் கூறும். இம் மரபு எங்கள் சமயத்தில் பல நூற்றாண்டுகளாகப் பயின்று வருகின்றது.

இந்தியாவில் பலபல ஆலயங்கள் உண்டு. தல புராணங்களும் பல அமைந்துள்ளன. ஈழத்தில் சில ஆலயங்களுக்கு மட்டுமே புராண வரலாறு எழுதப்பட்டள்ளது. இவ் வரிசையில் விசுவேசர் புராணமும் எழுதப்பட்டிருப்பது வரவேற்கத் தக்கதாகும். இப் புராணம் மரபு வழி தவறாது அமைந்துள்ளது. மயில்வாகனாரின் சீரிய ஆற்றலைச் செப்புகின்றது.

நம் சைவசமயத்திற்குப் பெருமை சேர்த்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு முன்னும் பின்னும் இருந்த அறிஞர்கள் பலரும் ஆலயங்களிலும் சைவமடங்களிலும் புராணபடனம் செய்ததனையும்-செய்து வருவத்னையும் நினைவுகூர்தல் வேண்டும், இம்மகத்தான சேவையினால் எங்கள் கல்விப் பாரம்பரியம் உலகளாவிய ரீதியில் தலைநிமிர்ந்து நிற்கின்றது.

புலவர்மணி அவர்கள் இறைவன் அருளால் பல்வகை நலன்களும் பெற ஆசீர்வதிக்கின்றோம். அன்பர்கள் இந்நூலைப் பெற்றுப் படித்துப் பயன்பெற இறைவன் அருள் பாலிப்பானாக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

சுபம்

ஓம் சிவ ஓம்

## யாழ்ப்பாணம் சிவதொண்டன் சபை, தலைவர்

### தவத்திரு. அ.செல்லத்துரை சுவாமிகள் வழங்கிய

# அருளாசி

எந்த வேளையும் அடியவர்களுக்கருள் புரியும், கந்தவேளின் திருநாமத்தைக் கொண்ட எமது அன்பர், பண்டிதர் மயில்வாகனனார் கனவிலும் நனவிலும், செந்தமிழ் ஓம்புதலிலும் சிவ சேவை இயற்றுவதிலும் கண்ணாக இருப்பவர். வட்டூர்வாழ் மக்களின் முன்னேற்றங் கருதி, பலவகையான அறிவுத் தொண்டுகளையும் அருட்தொண்டுகளையும் ஆற்றிவருபவர்.

குணநலனும் கொள்கை உறுதியும் மிளிரும் வாழ்வினை ஓம்பி உலகம் உவப்ப பல நூல்களை ஆக்கியதோடு அமையாது ஆசிரியனாக, ஈழத்தில் பல இடங்களிலும் பணியாற்றி எடுத்துக் காட்டான வாழ்க்கையால் ஏனையோர் பலரையும் வழிநடத்தி மகிழ்வுற்றவர்.

அருள்மிகு விசுவேசர் புராணத்தில் இருந்து இவர்தம் சைவசமய ஆற்றலையும் தமிழ் மொழிப்பாண்டித்தியத்தையும் எவரும் இலகுவில் உய்த்துணரலாம்.

தாம் சென்று சென்று ஆசிரியத் தொழில் இயற்றிய இடமெங்கும் சைவத்தொண்டும் செந்தமிழ்க் கல்வியும் சிறப்புற ஆற்றி பெரும்புகழ் பெற்றவர். இவர் பாடிய இந்த விசுவேசர் புராண நூலைக் கற்போர் வேறெவர் உதவியுமின்றி இவர் பெருமையை உணர்வார்கள். என்பது எமது உறுதியான எண்ணம்.

கற்றதனாலாய பயனாம் வாலறிவன் நற்றாளைத் தொழுதலே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு தொண்டுகள் பல செய்து சூழலை மிளிர வைத்து தன்னை அறியும் நெறியிலும் முற்றாகத் தன்னை அர்ப்பணித்து வாழும் அருந்தமிழ் செல்வர் பண்டிதர், சிறந்த அதிபர். ஆயபல கலைகலைகளிலும் வல்லுநர் ஆகிய சிவதொண்டன், மயில்வாகனனார் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பணியாற்ற வேண்டுமென ஆசி கூறுகின்றோம்.

அன்பர்கள் எல்லோரும் விசுவேசர் புராணத்தைப் பெற்றுப் படித்து இன்புற வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

சுபம்

உ

சிவமயம்

## காரைநகர், ஈழத்து சிதம்பர தேவஸ்தானத்தைச் சேர்ந்த மூதறிஞர், பண்டிதமணி, சிவத்திரு.க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்

# வழங்கிய வாழ்த்துரை

ஞான நூல்களைப் படிப்பதும், அவற்றின் நுண் பொருள்களைப் பிறர் சொல்லக் கேட்பதும், கேட்டவற்றைச் சிந்தித்துத் தெளிவதும் முத்தி சாதனம் என்கிறார், சகலாகம பண்டிதர் அருணந்தி சிவம்.

"ஞான நூல்தனை ஓதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல்- நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை"
-சிவஞானசித்தியார் 275

புராணங்கள் ஞானநூல்களின் வரிசையைச் சேர்ந்தவை. சோபான முறையிற் கூறப்படும் முத்தி சாதனங்களிற் சிறப்புடைய புராணங்களின் மெய்ப் பொருளை உணர்தலும் ஒன்றாகக் கூறப்படுகிறது.

"சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும்"
-சிவஞானசித்தியார் 263

வேதத்திலே கூறப்படும் தருமங்களையும் போதனைகளையும் விரிவாக விளக்கிக் கூறுவன புராணங்கள். சிறு கடிகாரத்தின் நுண்ணிய எந்திரக் கூறுகளைப் பூதக் கண்ணாடியின் துணைகொண்டு அறிவது போல, வேதங்களின் நுண்பொருள்களைப் புராணமாகிய பூதக்கண்ணாடி கொண்டு அறிதல் வேண்டும்.

தலபுராணங்கள் அவ்வத்தலங்களின் வரலாறுகளையும் பெருமைகளையும் விரித்துக் கூறுவன. அவை ஏனைய வரலாற்று நூல்களைப்போலச் சாதாரண மனிதர்களின் வரலாறுகள் அல்ல. ஆன்ம ஈடேற்றத்தை நல்கும் மாண்புமிக்க சாதனங்களே அப்புராணப் பனுவல்கள்.

கைலாசபுராணம்,திருக்கேதீச்சரப் புராணம்,திருக்கரைசைப் புராணம், நகுலகிரிப் புராணம், ஈழத்துச் சிதம்பரப் புராணம் முதலியன

ஈழத்திலே தோன்றிய தல புராணங்களாகும். இந்த வரிசையில் வருகின்றது வீரபத்திரசிவபுராணம் என வழங்கும் அருண்மிகு விசுவேசர் புராணம்

1320 செய்யுள்களையுடைய இந்நூல் ஏனைய தல புராணங்களைப் போல வடமொழியிலிருந்து மொழிபெயர்த்துச் செய்யப்படாது புதுமையாகப் புனைந்த ஓர் ஆக்க இலக்கியம். சிந்தாமணி, இராமாயணம், பெரியபுராணம், கந்த புராணம், சங்கச் செய்யுள்கள், தேவார திருவாசகங்கள் என்பவற்றின் சாயல் இந்நூலில் படிந்திருப்பதை நூற்பயிற்சி யுடையோர் நன்கு அறிவர்.

இப்புராணம் திராட்சா பாகமாய் அமைந்துள்ளது; சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் நல்குவது. சைவசமய நுண்பொருள்களும் பக்திச் சுவையும் யாங்கணும்விரவி நின்று கற்போர் நெஞ்சை காமுறப்படுத்தித் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனி தன்னைச் சிவமெனக்கண்டு மெய்யன்போடு வணங்கச் செய்து, பேரானந்தப்பெரு வெள்ளத்தில் அமிழ்த்தும் சிறப்புடையது.

இந்நூலின் ஆசிரியராகிய வட்டுக்கோட்டையூர்ப் புலவர்மணி பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்கள் பல்வகை ஆற்றல்களும் நன்கு வாய்க்கப்பெற்ற செந்தமிழ்ப்புலவர்; பல நூல்களின் அசிரியர். நூல்கள் பல்வற்றிற்கு நல்லுரை கண்ட பேரறிஞர். இலக்கண இலக்கிய நூல்களை எண்பொருளவாகச் செலச்சொல்லும் திறமையும் ஈடும் எடுப்பும் மிக்கவர். சைவசமய நூல்களின் செம்பொருளை நன்குணர்ந்தவர்.

புலவர்மணி மயில்வாகனனார் அவர்கள் விசுவேசர் திருவடிகளிற் பக்தியுடன் சூட்டியுள்ள இத்தலபுராணம் தமிழிலக்கியங்களிற் புதிய தெய்வத் தமிழ்ப் பணியாக விளங்கிச் சிறப்புறுக என்று வாழ்த்துகிறோம் புலவர்மணி அவாகள் நல்லன எல்லாம் பெற்று நீடூழி வாழ்க என எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரக் கூத்தப்பிரானின் சேவடிகளைச்சிந்தித்து வணங்கி அமைகின்றோம்.

"அன்றாலின் கீழமர்ந்தே அறம்புகன்றாய் நால்வர்க்காய்
இன்றுவட்டூர்க் கொள்ளோலை அக்குமர நிழலமர்ந்தாய்
குன்றாத செல்வமொடு கூறுநலம் ஆயவெலாம்
நன்றாக வேயருளி நாளுமெமைப் புரந்தருளே"

[-விசுவேசர்புராணம் செய்யுள் 879]

உ

சிவமயம்

வட்டுக்கோட்டையூர் அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத காசி விசுவநாதர் தேவஸ்தான முதல்வர், ஆயுர்வேத வைத்திய கலாநிதி,

## திரு.கா.சுமந்திரன் அவர்கள்

# வழங்கிய நல்லாசி

எங்களூர்ப் பெரியார் புலவர்மணி, பண்டிதர் க.மயில்வாகனனார் அவர்கள் பல்லோரும் போற்றும் நல்லறிஞர். எங்கள் வீரபத்திர சிவன் கோயிலுடன் இளமை முதற் கொண்டே நெருங்கிய தொடர்புடையவர்.

எமது தந்தையார் ஆயுர்வேத வைத்திய கலாநிதி அ.க. காசிப்பிள்ளை அவர்களின் வேண்டுகோட்படி அருள்மிகு விசுவேசர் புராணத்தை இயற்றி பன்னிரண்டாண்டுகளுக்கு முன்னே இறைவன் திருவடிகளிற் சூட்டி மகிழ்ந்தவர்.

நாட்டிலேற்பட்ட இடப்பெயர்வாலும், வேறு பிற காரணங்களாலும் புராணம் அச்சேறாமல் இருந்தது. வெளியீட்டுக்கென்று சிறப்பாக அமைக்கப்பட்ட பதிப்பாளர் வட்டத்தாரின் அரிய முயற்சியால் புதுப் பொலிவுடன் வெளிவருகின்றது.

தமிழ் நாட்டு அறிஞரும் நம் நாட்டு அறிஞர்களும் இப் புராணத்தின் பெருமையைப் பாராட்டியுள்ளமையை நன்கு அறிவேன்.

அன்பர்கள் ஒவ்வொருவரும் இப் புராணத்தை பெற்றுப் படித்து பயன்பெற வேண்டுமென்று விசுவேசப் பெருமான்திருவடிகளை வணங்கி வேண்டிக் கொள்கிறேன். ஆசிரியர், மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து சிவப்பணிகள் பல புரிய இறைவன் திருவருள் பாலிப்பானாக.

வட்டுக் கோட்டையூர்

புலவர் மணி. பண்டிதர்.திரு.க.மயில்வாகனனார் எழுதிய

# விசுவேசர் புராணம்

நயப்புரை

முனைவர்.இரா.செல்வக்கணபதி. எம்.ஏ.பி.எட்.பி.எச்.டி

மயிலாடுதுறை

தமிழ்நாடு

தேவார மூவர் பாடல் பெற்ற சிவத்தலங்கள் ஒரு காலத்தில் சைவப் பெருமக்களை வழிபாட்டில் ஈடுபாடுகொள்ளவைத்தன. அருணகிரிநாதர் வருகைக்குப்பின் முருகன் தலங்களுக்குப் பெருமை மிகலாயிற்று. கி.பி.16-ஆம் நூற்றாண்டுக்குப்பின் தலபுராணங்கள் மக்களைத் திருக்கோயில்கள்பால் ஈடுபாடு கொள்ள வைத்தன.

தாம் வாழும் ஊரிலேயே, ஆகம நெறிப்பட அமைந்த சிவாலயம் இருந்தும் மக்களில் பலர் அங்கே சென்று வழிபடாது ஒரு சில தலங்களையே சிறந்தன எனக் கருதி வழிபட்டு வந்தனர். எல்லாத் தலங்களிலும் இருப்பவன் ஒரே இறைவன்தான் என்று உணரும் நிலை வாய்க்கப் பெறாதவர்களை உள்ளூர்க் கோயில்களில் ஈடுபடவைத்த பெருமை தலபுராணங்களையே சாரும்.

இத் தலத்தில் இது நிகழ்ந்தது. இறைவன் அருள் இன்னாருக்கு இவ்வாறு அமைந்தது. இங்கே வழிபட்டால் இன்னது கிடைக்கும் என்ற நம்பிக்கை ஊட்டப்படும் போது மக்கள் அத்தகு தலங்களை நாடிச் செல்வது இயற்கையேயாகும். கடவூர் இறைவன் எமபயம் நீக்குவான். புள்ளிருக்கு வேளூரான் நோய் தீர்ப்பான். வெண்காட்டில் நீராடி வழிபட்டால் மகப்பேறு வாய்க்கும். திருமணஞ்சேரி அம்மையப்பன் மணவினை காட்டுவான். கருவூர் அம்மை கருக்காத்து உதவுவாள். நள்ளாற்று இறைவன் சனித்துயர் தீர்ப்பான் என்பனவெல்லாம், புராணப் பெருமை விரித்துரைக்கப் பெற்றமையால் மக்களைப் பெரிதும் ஈர்த்தன.

ஒரு வகையில் மதுரையில் எழுந்த திருவிளையா டற்புராணமும் கூட தலபுராணமாகவே கருதப்படுகிறது. மாதவச் சிவஞான சுவாமிகளும், கச்சியப்ப முனிவரும், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களும் தலபுராண வரலாற்றின் முன்னோடிகள்.

இவ்வரிசையில், இலங்கை, வட்டுக்கோட்டையில் எழுந்தருளியிருந்து அருள்பாலித்து வரும் விசாலட்சியம்மை உடனுறை விசுவநாதப் பெருமான்மீது இவ்வூர், புலவர்மணி, பண்டிதர். திரு.க. மயில்வாகனனார், வீரபத்திர சிவபுராணம் எனப் பெயரிய, அருள்மிகு. விசுவேசர் புராணம் என்ற அரிய நூலை யாத்தளித்துள்ளர்.

தலபுராண மரபுகள் ஒன்றும் வழுவாது, அழுத்தமான பக்தி உணர்வு இழையோட, செம்மாப்புடைய விருத்தப்பாக்களால், கற்போரைக் கழிபேருவகையில் ஆழ்த்தும் ஓர் அரிய சமயக் கருவூலமாக ஆசிரியர் இப் புராண நூலைச் சைவ உலகத்திற்கு உபகரித்துள்ளார். பாயிரச் சுருக்கம் முதல் விழாவயர் சுருக்கம் ஈறாகப் பத்துச் சுருக்கங்களையும், ஆயிரத்து முந்நூற்று இருபது திருவிருத்தங்களையும் கொண்டுள்ள விசுவேசர் புராணம் தல புராண வரலாற்றில் பெருமிதத்துடன் என்றென்றும் நின்று நிலவும் ஊற்றம் மிக்கதாகத் திகழ்கிறது. சருக்கம் என்பது கதைபொதி கூறு என்று கருதப்படுவதால் முதல் பகுதியைப் பாயிரம் என அமைத்து, எஞ்சிய ஒன்பது பகுதிகளையும் சருக்கங்களாகக் கொள்வது மரபை ஒட்டியதாக அமையும்.

இலங்கை வாழ் தமிழ்ப்புலவர்களிடம் காணப்படும் இலக்கணப் புலமையும், மரபுவழித் தமிழ் ஊற்றமும், விரிவான பன்னூலறிவும் பண்டிதர் திரு.க.மயில்வாகனனாரிடம் நிறைந்திருப்பதில் வியப்பேதும் இல்லை. தளர்ச்சியுறாத விருத்தயாப்பும், எதுகை மோனைகளில் தாமே வந்திணையும் தமிழ் மற்றும் வட மொழிச் சொல்லடைவும், கதை ஓட்டத்தை ஒட்டி வேறுபடும் ஓசை வேறுபாடு காட்டும் கம்பீர நடையும், இப் புராணத்தைக் கற்பாரால் இனங்கண்டு போற்றப்படும் என்பது ஒரு தலை. பன்னிரு திருமுறைகளிலும், முப்பெரும் புராணங்களிலும், முருக இலக்கியங்களிலும். சைவசமயப் பிரபந்தங்களிலும் நூலாசிரியருக்கு இருக்கும் அழுத்தமான தோய்வை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும்.

வட்டூர் அருள்மிகு. விசாலாட்சி சமேத விசுவநாதர் திருக்கோயிலை நூற்று ஆறு ஆண்டு இவ்வுலகில் வாழ்ந்திருந்த, சித்த மருத்துவரும், தவ ஒழுக்கங்களில் மேம்பட்டவருமாகிய சிவநேயச் செல்வர். அப்பாமுதலி என்பவர் அமைத்து, நித்திய நைமித்திய வழிபாடுகளுக்கு நிபந்தனைகள் வழங்கியுள்ளார். அன்னார் பெயரரும், சித்த மருத்துவருமாகிய திரு. காசிப்பிள்ளை என்பார்

வேண்ட ஆசிரியர் இந்த இனிய விசுவேசர் புராணத்தை இயற்றியுள்ளார். இவை பாயிரப்பகுதியால் அறியவருவன. நூல் நிறுவும் பொருள்களைத் தொகுத்துச் சுட்டும் "பதிகம்" என்ற பகுதியில் இடம்பெற்றுள்ள பாடல்களை, நூலின் தொடக்கத்தில் இடம்பெறச் செய்து!, தொடர்ந்து பாயிரத்தை அமைப்பது, நூலைக் கற்கப் புகுவார்க்கு உதவியாக அமையும்.

கைலை மலைச் சருக்கத்தில் மாவிரதன் கதை சரியான இடத்தில் இணைக்கப்பட்டுள்ளது. ஈழத்துச் சிவதலங்களை எல்லாம் சிவபிரான் திருவாக்கால் பதிவு செய்திருப்பது ஆசிரியரின் தேசப்பற்றை விளக்குவதாக அமைந்துள்ளது.

யாழ்நாட்டுச் சருக்கம், ஈழம் பற்றிய ஒரு வரலாற்றுப் பதிவாகத் திகழ்கிறது. ஈழத்தமிழர் வரலாறும் பெருமித வாழ்வும், சிவபக்தியும் தமிழ் அன்பும் நம்மைத் தலை நிமிர வைக்கின்றன. நூற்று நாற்பத்து மூன்று விருத்தங்களால் விரியும் வட்டுமா நகர்ச் சுருக்கம் பெருங்காப்பியங்களில் அமையும் நகரப்படலம்போல் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. நிலவளம், நீர்வளம், உள்ளூர் வரலாறு, பெருமை சேர்த்த பல்துறை அறிஞர்கள் எனச் செய்திகளின் அணிவகுப்பாக நின்று இப்பகுதி புராணத்திற்கு அழகு சேர்க்கிறது.

வீரபத்திரசுவாமி சருக்கம் தட்சயாகத்தை
விரித்துரைக்கிறது.

இரண்டாவது அருள்புரி காண்டமும், உபதேசச் சருக்கம் முதல், விழாவயர் சருக்கம் ஈறாக ஐந்து பகுதிகளைக் கொண்டு நடையிட்டு நிறைகிறது.

பழுத்த தமிழ்ப்புலமை பாலிக்கப் பெற்ற நூலாசிரியரின் தமிழறிவிற்கும், ஆழங்காற்பட்ட பத்திமைக்கும் கட்டியங்கூறி நிற்கும், தொடர்களும் இப் புராணத்தில் ஏராளம் உள்ளன. சிலவற்றை நினைவுகூர்வது மகிழ்ச்சி தரும்.

சந்தானாசாரியரை,
"போதாந்த ஒளிபரப்பி விளக்கிநின்று
புன்மையிருள் போக்கிவைத்த
தாதாக்கள்"

என்று குறிப்பிடும் அழகும், கொழும்பு நகர்ச் செல்வச் செழிப்பை,

"இந்திரன் பேரூர் கொல்லோ
இருநிதிக் குபேரன் ஊரோ
எந்தஊர் நேரும் என்னா
ஏங்கியே புலவோர் நிற்ப"

என்னும் பாடல்களும் அமைந்திருப்பதாகப் புனையும் வியப்பும், நாவலர் பெருமானை,

"ஒருவாத கலைஞானக்
கதிரவனாய் இருளகற்றி
வருவாய்மைச் சிவநெறியைத்
தமிழ்மொழியை வளர்தவருட்
குருவாய ஆறுமுக நாவலர்....

என்று புகழ்ந்துரைக்கும் தமிழ் அன்பும், தென்னாட்டுக் கொற்கைத் துறையே, ஈழத்தில் திரிபுற்றுக் "கொத்தைத் துறை" என் மருவியிருக்க வேண்டும் என்ற வரலாற்றுப் பார்வையும், நூலாசிரியரின் பெருமைக்குக் கட்டியம் கூறி நிற்கின்றன.

கம்பனும், வில்லியும், சேக்கிழாரும், சயங்கொண்டாரும் மேற்கொண்ட நடைநலனும், சந்த எழிலும் ஆசிரியரைப் பெரிதும் பாதித்துள்ளமை புலனாகிறது.

வீரபத்திர சுவாமி சருக்கத்தில்,

" தக்கனது வேள்விநிகழ் சாலையது மேவி
மிக்கிடுநம் அவிசதனை வேண்டிடுதிர் நல்கின்
அக்கணம் மீள்குதிர் அன்றென மறுத்தால்
புக்கவனின் சென்னியொடு வேள்வியும் போக்கீர்"

எனவரும் சந்தத்தில் கம்பனும், வில்லியும் நிழலாடுகின்றனர். உபதேசச் சருக்கத்தில்

"மண்ணதனில் வாழ்வார்கள் வல்வினையின் மாசகலக்
கண்ணுதலான் இன்னருளே கருணைசெய்யும் பரிசதனால்
நண்ணியநற் கயிலையுறை நந்திகணத் தோர்குரவர்
விண்வழிவந் துபதேசம் செய்சருக்கம் விளம்புகிற்பாம்"

என அமையும் மயில்வாகனனார் கவிதையில் பெரியபுராணம் நிழலாடுகிறது.

அபத்தக் கற்பனைகள், இல்பொருள் உவமைகள், மருட்டும் உருவகங்கள் எதுவும் இந்நூலில் இடம்பெறாமை மகிழ்வைத் தருகிறது.

துதிப்பாடல்களில் ஆசிரியரின் பத்திமையும் இறையன்பும் புலனாகின்றன.

"ஆங்கங்கே கலைகள் தேரும் அறிவனாக" முன்னோர் நூல்களிலிருந்து அரிய சொல்லாட்சிகளை ஆசிரியர் தேடிக் கொணர்ந்து நூலில் பதித்துள்ளார்.

யாப்பியல் மற்றும் சந்தக்குறியீடுகளை நீக்கிவிட்டு பாடல்களில் இடம்பெறப்போகும் செய்திகளைச் சிறு தலைப்புக்களாக இடம்பெறச் செய்வது கற்பாருக்கு உதவியாக அமையும்.

அருள்மிகு விசாலாட்சியம்மை உடனமர் விசுவேசன் தன்னருளும், வீரபத்திரரின் அருட்கருணையும், அப்பா முதலியின் குருவருளும் ஆசிரியருக்கு என்றென்றும் நலம் சேர்ப்பன.

இந்த அரிய தலபுராணத்தை தமிழ் உலகுக்கு உபகரித்த பண்டித மயில்வாகனனார் சைவத் தமிழ் மக்களின் நன்றிக்கு உரியவராகிறார்.

சைவத் தமிழ் உலகம் இந்த அரிய கலைக் கருவூலத்தை ஏற்றிப் போற்றி உய்யட்டும்.

# ஆய்வுரை

இலக்கிய கலாநிதி

பண்டிதமணி, சித்தாந்த கலாநிதி

**திரு.மு.கந்தையா அவர்கள் B.A**

ஈழத்தின் வளம்மிக்க தமிழ்ப் புலமை வீறு, தலபுராணப் படைப்பிலும் தலை காட்டத் தவறவில்லை. காலத்தால் முந்தியனவாகக் கருதப்படும் தக்ஷிணகயிலாச புராணம், திருக்கரைசை புராணம், திருக்கோணாசல புராணம் என்பவற்றைத் தொடர்ந்து கதிர்காம புராணம், நகுலேசபுராணம், நகுலகிரிப் புராணம், மாவைப் புராணம், திருக்கேதீச்சரப் புராணம், புளியம் பொக்கணைப் புராணம், ஈழத்துச் சிதம்பர புராணம் எனப் பலவும் வெளிவந்துள்ளன.

இவற்றுள் மாதகல் ஏரம்பையர் இயற்றிய நகுலாசல புராணமும். மாவைக் குமாரசுவாமிக் குருக்கள் இயற்றிய மாவைப் புராணமும் அச்சேறாமை மட்டுமன்றி இந்நாள் சென்றிடமும் இருந்திடமும் தெரிந்துகொள்ள முடியாத நிலைக்கிடமாயுள்ளன. பிரதேச சைவசமயத் தொன்மை நடைமுறை விளக்கமும் தல பத்தி உணர்வூற்றம் விளக்கும் பாங்கில் தல புராணங்கள் விளைக்கும் பங்கு வேறு எச் சாதனங்களாலும் ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும். சைவத் திருமுறைகள், சைவசித்தாந்த சாஸ்திரங்களினால் நாடிப் பயன்பெற இயலாத சாமானிய சைவ அன்பர் விஷயத்தில் இது விசேட முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றென்பது அனுபவப் பிரசித்தம்.

யாழ்வலிமேற்கின் மத்தியஸ்தானமாகத் திகழும் வட்டூர் விஸ்வேச சுவாமி கோயிற் பேரில் தற்காலத்து உருவாகி வெளியிடப்படும் விஸ்வேசர் புராணம் இந்நோக்கிற் பெரிதும் வரவேற்கப் பெறுகின்றது.

இங்குள்ள கொள்ளோலைப் பதியில் விஸ்வேசர் எழுந்தருளுதற்கு முன்னமே வீரபத்திர சுவாமி எழுந்தருளியிருந்த சிறப்பையும் நினைவுகூரும் முகத்தால் வீரபத்திர சுவாமி புராணம் என வழங்கும் விஸ்வேசர் புராணம் என இதன் பெயர் அமைகின்றது.

வட்டூருக்கு வழங்கும் நாம பேதங்களான சிந்துபுரம், சிவபுரம், விஸ்வேசபுரம் என்பவற்றின் தாற்பரியம் இனிது விளங்க நிற்கிறது. இத்தல புராணம்.

இதன் வரலாற்றுத் தொடர்பு திருக்கைலையிலிருந்து தொடங்குவதும் கதையுட்கதையாக மூன்று கதைகளையிது உள்ளடக்கியிருப்பதும் மூன்றாவது கதையாகிய மாவிரதன் கதையில், காசி விசாலாட்சி அம்மை அவனுக்குப் போக தலங்கள் பற்றி விளக்கங் கொடுக்கும் தொடர்பில் வைத்து வட்டூர்விஸ்வேசர் தல மகிமை அறிமுகமாகும் கற்பனை இயைபும் பக்த புருஷர்கள் திருவருளால் உந்தல் பெற்றுக் கோயிற் பிரதிஷ்டை, மூர்த்திப் பிரஷ்டை நித்திய நைமித்திக வழிபாடுகள் ஆற்றிவரும் விபரங்களைப் பரக்கச் செழிக்கத் தந்து கொண்டிருப்பதும் இதன் தலபுராணப் பண்பமைதியை நன்குணர்த்தும்.

நூற்புணர்ப்பைப் பொறுத்தவரையிற் புராணங்களும் காப்பியங்களே. பெருங்காப்பியம், சிறுகாப்பியம், என்ற பேதம் இவற்றுக்கும் பொருந்தும், கந்தபுராணம், பெரியபுராணம் என்பன பெருங்காப்பியங்கள் என்பதற்கெதிர் இவை சிறு காப்பியங்கள் என அமைகின்றன.

அதற்கிணங்க நாட்டுவளம், நகர்வளம், திணைவளம், வாழ்க்கை வளம் தொழில்வளம் கலைவளம், கற்பனைவளம் என்ற சிறுகாப்பியப் பண்புகள் பலவும் இவற்றில் பிரதிபலித்தல் காணலாம்.

தூலத்தை முன்பு காட்டிச் சூக்குமத்துக்கு வழி நடத்தும் தந்திர உத்திக் கிரமத்தில் சைவ ஈழத்தை முதலிற் காட்டி யாழ்ப்பாணப் பண்பைத் தொடர்ந்து வட்டூர் மான்மியம் தெரிவிக்கும் முறையில் நூற் பொருள் நடைமிகுகின்றது.

யாழ்ப்பாணச் சிறப்புகளைக் குறிக்கும் பகுதி திருத்தொண்டர் புராணத்தில் வரும் திருக்குறிப்புத் தொண்டர் புராணம் காட்டும் தொண்டைநாட்டுத் திணைவளம் கூறும் பகுதியை அச்சொட்டாகப் பிரதிபலிக்கின்றது. யாழ்ப்பாணத்திற் குறிஞ்சி எங்கே, பாலை எங்கே என்பது கேள்வியல்ல கருப் பொருளிலும் அதிலும் விசேடமாக உரிப்பொருளிலுந் தானே திணைவளம் தங்கியுள்ளது, யாழ்ப்பாணத்திலும் அந் நிலங்கட்குரிய தெய்வம், மரம், தொழில், பறவை, உணவு முதலான கருவும், உள்ளப் புணர்ச்சி, பிரிவு என்ற உரியும் இல்லை என்பாரார்? என்ற கடா இடம் பெறுதலும் ஏன் பேருக்கென்றாலும் கீரிமலை, நவகிரி, வழுக்கையாறு உண்டன்றே என்னும் சாகசமும் கவலை பற்றிக் கவலையேன் அளக்கலாகா அளவும் பெருமையும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் உள்ள குணமலைகளாகிய சான்றோர்கள் இருத்தலே போதும் எனக் காட்டும் துணிச்சலான விதப்பும் காப்பியக் கற்பனையிற் புதிர்களாகத் தோன்றி

உணர்வின்பம் விளைப்பனவாகின்றன.

இல்லது புனையினும் நல்லதாகவே அமைந்து காப்பியச் சுவை பயக்க வைக்கும் நல்லியற் புலவர் மாண்பு இங்கே தளிர்த்தல் குறிப்பிடத்தகும்.

புகழ்பெற்ற கச்சியப்பர், சேக்கிழார். கம்பர் கற்பனைச் சாயல்கள் அணி அலங்காரங்கள் ஆங்காங்குத் தோன்றி இதம் பயப்பதும் ஒன்று. யாழ்ப்பாணம் குறித்த வர்ணனையில் நிலாவரையை அறிமுகப்படுத்தும் கற்பனா கௌரவம் புதுமையானது. பாதல அழகு காணல் பூதலம் (பூதலத்தோர்) பில வழி சென்றதாக உள்ள புராணக் கற்பனைகளுக்கெதிர் பாதல மங்கையே பூதல அழகுகாண நீருருவாக மாறிப் பிலவழி பிடித்து வந்ததாயிருக்கிறது. நிலாவரை என்ற வருணனை இந் நூற்கற்பனைச் சிறப்புக்கு ஓரவிழ்பதம் பார்த்தலாதல் பொருந்தும்.

இங்ஙனம் யாழ்ப்பாண மான்மியத்தினுக்கு காட்சிப் படுத்தப்படும் வட்டூர் மான்மியம், வட்டுக்கோட்டையூரின் அகவிருத்தி, புறவிருத்தி, லௌகிக வளம், ஆத்மிகவளம், செல்வ வளம், கல்வி வளம் அனைத்தினூடாகவும் அங்கு தனித்துவமாக மிளிரும் கோயிற் கலாசார வளத்தைக் கண்கொளக் காட்டும் ஒளிப்பதிவுச் சாதனமாயமைந்து, நூல் நுதல் பொருளுக்கு உரமூட்டுதலாகின்றது. "வண்டூத முகையவிழ்ந்து மணங்கமழ்ந்து மதுப்பில்கும் தண்டலைசேர் வட்டூர்" "தெற்றிதொறும் இருந்து கிள்ளை திருமுறைகள் பாடிமகிழ் வட்டூர்" "கூத்தும் பாட்டும் ஓவாதே குலவும் சீர்த்தி வட்டூர்" இவை போன்ற வர்ணனைப் பகுதிகள் இவ்வகையில் முக்கியத்துவம் பெறும்.

நாளிதுவரை வட்டூர் வாழ்ந்த வாழ்வெல்லாம் காசி விஸ்வேசரைத் தன் அகமுடையானாகக் கொள்ளும். குறிக்கோளாகவே அமைந்ததென்னும் விளக்கந்தொனிக்குமாறு அப்பா முதலிக்கு முன் இரண்டும் பின் இரண்டுமாக ஐந்து தலைமுறையும் தொடர்ந்தேர்ச்சியாகக் கோயிற்பணிகளில் ஈடுபட்டுவரும் வரலாறு இங்கு இடம் பெறுதல் குறிப்பிடத்தகும்.

இத் தொடர்பின் மையநிலையாய்த் திகழும் சிவ அப்பா முதலி விசுவேசர் பிரதிஷ்டை நிகழ்த்த முன்னமே விசுவேசர் அவர்கனவிற் தோன்றி தத்துவஞான உபதேசம் புரிந்ததாக அமையும் இந்நூற் செய்தியும் அவ்வுபதேசத்தில் வேதாந்தவுபதேசம், முன்னும் சித்தாந்தவுபதேசம் பின்னுமாக அமையும் பொருத்தமும் கோயில் நிர்மாணம், மூர்த்திப் பிரதிஷ்டை என்பன செய்வார் சுயமான தத்துவஞானத் தெளிவுள்ளவராதல் வேண்டும் என்ற நியதிபற்றிய உணர்வெழுச்சிக்கும் வேதாந்த ஞான விளக்கத்தை பூர்வபக்ஷமாகக்

கொள்வது சித்தாந்த ஞானத்தெளிவுக்கு முன்னோடி நியமம் என்ற கொள்கை வலுவுறுதற்கும் சிறந்த ஊடகங்களாய் அமைந்திருத்தல் போற்றத்தகும்.

சிவ அப்பா முதலி கோயில் கும்பிட்ட பண்பும் பரிவும் சிரத்தையும் விரித்து விளக்கப்பட்டிருத்தல் இந்நூல் கற்றாரிடத்து அத்தகைப் பண்பும் பரிவும் சிரத்தையும் தொற்றிக் கொள்ள வைக்கும் அளவுக்கு வீறும் விறலும் மிக்கதாயிருத்தலும் அத்தகையதே.

இலக்கியத்தையும் செய்யுள் என்ற பெயரில் அடங்கக்கொண்டு செய்யுள் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் அவ்விலக்கணக்கூறுகளில் ஒன்றாகக் கொண்டுள்ள எண்வகை வனப்புகளில் இரண்டுக்கும் தண்டியலங்கார ஆசிரியர் செய்யுட் குணஅணிகளாகக் குறிப்பிட்ட தெளிவு, செறிவு, சமநிலை என்பவற்றுக்கும் இந் நூல் இலக்கியமாகிறது.

நான்கு தலைமுறைக்கு மேலாக வட்டூர்ப் பிரதேசத்தில் நம்பப்படடு வந்த பழைய வரலாற்றைக் கொண்டிருக்கும் இதன் வனப்பு தொன்மையெனப்படும். வீரபத்திரர் பிரதிட்டை கூறும் தொடர்பில் கந்த புராணத்துத் தக்கயாகப் படலம் கூறும் வரலாற்றைச் சுயசெய்யுளாக்கத்தில் தந்திருப்பதும் சுப்பிரமணியர் பிரதிட்டை கூறவந்த தொடாபில் அதே புராணம் கூறும் திருவவதாரப் படல வரலாற்றையும் அங்ஙனமே தந்திருப்பதும் விருந்து என்னும் வனப்பாகும்.

"விடையவனே கரவினர்பால் விரவாத வித்தகனே
இடையிருளில் நடமியற்றும் என்பொன்னே விசுவேசா
மடையுடைத்து நீரபாயும் வயல்மேவு கொள்ளோலைப்
புடையமர்ந்த திறமெல்லாம் புன்மையேம் பொருட்டன்றே"

என்பது போன்ற செய்யுள்கள் பலவற்றில் தெளிவும் சமநிலையும் சுயமாக விளங்குதல் கண்கூடு. இச்செய்யுள்களிற் பக்திச் சுவை பரிமளித்தலும் இத் தெளிவு சமநிலைகளின் செல்வாக்கிலேயே பெரிதும் தங்கியிருத்தலும் அறியத்தகும்.

சுப்பிரமணிய சுவாமி திருப்படிமம் வார்ப்பித்தலிற் சம்பந்தப்படும் அதிசய நிகழ்வு இந்நூலுக்கு அற்புதச் சுவை வழங்குமாறும் அறியத்தகும்.

இங்ஙனம் பல்லாற்றானும் மெய்ப்பயன் விளைக்கும் இத்தலபுராணத்திற் சம்பிரதாயப்படி குற்றங்காணில் ஆனந்தக் குற்றம் காணப்படலாம். ஆசிரியர் தம் வாக்காகவும் கதாபாத்திரங்கள்

வாக்காவும் அளவிறந்த பக்திவாசகங்களை தந்துள்ளார். இது பக்தியானந்தம் என்றுமாம். இந்நூல் விசுவேசர் பத்தர்களைக் கேட்போர்களாகக் கொள்ளும் நூலாதலின் அதுவும் நன்மையாதல் ஒருதலை. சுவாமி வழிபடுவோர் பிரார்த்தனை என்ற பெயரில் மனப்புலாதிக்கேற்ற வாறெல்லாம் அலட்டிக் கொள்ளாமல், இப்பக்திச் செய்யுள்களைப் பரக்கச் செழிக்க ஓதி வழிபடுதல் மூலம், உண்மைப் பக்திப்பலன் பெறுதற்கிடமுண்டு.

இத்தல புராணம் ஆக்கியோன் பண்டிதர் புலவர்மணி க. மயில்வாகனனார் முறையான தமிழ்க் கல்வி மரபில் வந்தவர். தமிழ் நாட்டில் தரம் மிக்க தமிழ் சமஸ்கிருத வித்துவானாக விளங்கியவரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை அபிமான குருவாகக் கொண்டு அவர் வாழ்க்கை நடையையும் சேவை நலன்களையும் பின்பற்றிச் சிறப்புற்று இருந்தவருமான ம.க.வேற்பிள்ளைக் குருவின் சீடராய, சிதம்பரம் வித்துவான் பண்டிதமணி ந.சுப்பையபிள்ளை அவர்களிடம் இலக்கண, இலக்கிய, தருக்கநூல்களிற் பயிற்சி பெற்றுத் தேர்ந்தவர். ஈழத்துச் சிறந்த தமிழாசிரியர் நிரலில் உள்ளவர். சித்தாந்த விளக்கத்திற்கு இன்றியமையாத வேதாந்த விளக்கமும் நன்கு வாய்க்கப் பெற்றவர். இந்நூல் உபதேசப் பகுதியில் பிராந்தன் கூடஸ்தன் அட்டகாயம் பிரமசாயை சிற்சாயை போன்ற வேதாந்த பரிபாஷைகளை உண்மை விளக்கம் புலப்பட அவர் கையாண்டிருத்தல் அதற்கு அறிகரியாகும்.

சைவக் கோயிற் பிரதிட்டை ஆதிக்கிரியைகளிற் சிறந்த ஆராய்ச்சி அறிவுள்ளவர். அநாவர்த்தம், ஆவர்த்தம், புநராவர்த்தம், அந்தரிகம், சிவலிங்கவிபரம் என்பன பற்றி அவர் கொடுத்திருக்கம் விளக்கங்கள் அதற்கத்தாட்சி.

அவர் நாளிதுவரை தமிழ், சைவ, தத்துவஞானத் துறைகளில் தாம் தேடித் தேக்கிய அறிவனுபவப்பயன் முழுமையையும் விளங்க இத்தலபுராணத்தை இயற்றிச் சைவ உலகுக்கு வழங்குகிறார்.

விசுவேசரருளால் அவரும் அவர் நூலும் நிலவுலகில் புகழ்பெற்றொளிரப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்

## பேராசிரியர், கலாநிதி,
## சிவத்திரு.ப.கோபாலகிருஷ்ண ஐயர்
### இந்துநாகரிகப் பேராசிரியர்,
### கலைப்பீடாதிபதி, யாழ், பல்கலைக்கழகம்

எமது சமய மரபில் பக்திநெறியை வளம்படுத்துவதில் புராணங்கள் பெரும்பங்கு வகித்து வருகின்றன. பாமர மக்களுக்குச் சமய உண்மைகளைத் தெளிவாக விளங்க வைப்பதில், அவை நிகரற்ற பங்கு வகிக்கின்றன. சைவ நூல்கள் நிறுவ முயலும் சமய உண்மைகளுக்குப், புராணங்கள் தக்க சான்றுகளாக அமைகின்றன. தென்னாட்டுத் திருக் கோயில்களில், கோபுரம் விமானம் முதலியவற்றில் மிளிரும் சிற்பங்க்ள், புராண நிகழ்ச்சிகளை எம்மனக்கண் முன் கொண்டு வருவதோடு, பக்தியை வளம் படுத்தும் வகையிலும் பரிமளிக்கின்றன. எனவே புராணங்கள் மக்களது சமய நம்பிக்கைக்கும், வாழ்வியலுக்கும் வழிகாட்டி நிற்பதோடு திருக்கோயிற் பண்பாட்டிற்கு மூலமாகவும் விளங்குகின்றன. திருக்கோயில் சார்ந்த பண்பாட்டினை எடுத்துக் கூறும் நூல்கள் தல புராணங்கள் எனப்படலாயின. தமிழில் எழுந்த புராணங்களைக் கொண்டு, எமது சமய மரபின் வளர்ச்சியை நாம் மட்டிடலாம். அத்தகைய தலபுராணங்களில் ஒன்றாக அறிமுகமாகின்றது வீரபத்திர சிவபுராணம் என வழங்கும் அருள் மிகு விசுவேசர் புராணம். இதனைச் சிறப்புற ஆக்கியளித்தவர், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த புலவர்மணி, பண்டிதர், திரு.க. மயில்வாகனனார். அவர்களாவர். இவர் சைவ சமயப் பற்றும், செந்தமிழ்ப் புலமையும், கவித்துவ ஆற்றலும் மிக்க நல்லறிஞராவர்.

எமது சமய இலக்கிய மரபில் சிறப்பிடம் பெறும் புராணமரபை அடியொற்றி புலவர்மணி பாடியுள்ள இத்தலபுராணம், எமது சைவசமயநெறியின் வளர்ச்சிக்குச் சிறந்ததொரு வழிகாட்டியாகவுள்ளது. இவ்வகையாகப் புராணங்கள் வகுத்துக் காட்டிய வழியில், விசுவேசர் புராணம் உருவாகியுள்ளமை எமக்குமட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வரிய படைப்பை சைவ உலகுக்கு உவந்தளித்த புலவர்மணி அவர்களைச் சைவ உலகம் பாராட்டுவதில் பெருமையடைகின்றது.

புலவர்மணியின் இவ்வரிய படைப்பை சைவ மக்களுக்கு நன்கு அறிமுகம் செய்யும் நோக்கில் விசுவேசர் புராணம் பதிப்பாளர் வட்டம், மூதறிஞர் பண்டிதர் சிவத்திரு க. வைத்தீசுவரக் குருக்கள் அவர்களைக் காப்பாளராகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இவ்வரிய நூலை சைவ அன்பர்கள் அதன் பயன், சிறப்புக் கருதி, இப்பதிப்பு வட்டத்தின் மூலம் வெளியிட முன்வந்தமை விசுவேசரின் திருவருளன்றி வேறில்லை. முன்னர் மும்மணி மாலை போன்ற அரிய நூல்களை உருவாக்கிய அனுபவமிக்க புலவர்மணி, இத்தலபுராணத்தை மரபுவழிச் செய்யுள்களைக் கொண்டு யாத்துள்ளார். இது ஒரு புராண காவியமாக மலர்ச்சியடைந்துள்ளது.

புலவர்மணி யாத்துள்ள இத்தல புராணம் 1320 பாடல்களைக் கொண்டுள்ளது.முதலாவதாக ஆதி காண்டத்தில் விநாயகர் காப்பு, விசுவேசர் துதி ஆகியவற்றுடன் தொடங்கும் இந் நூல், எமது சமய மரபில் உள்ள அனைத்துத் தெய்வங்களுக்குமான துதிகளை உள்ளடக்கியுள்ளது. அத்துடன் நாயன்மார்களுக்கான துதி. வித்தியாகுரு துதி, ஆகியவவை, இந்நூல் காவிய மரபுக் கியைய அமைக்கப்பட்டுள்ள தன்மையை காட்டி நிற்கின்றன. இந்நூல் செய்யப்பட்டதற்கான காரணம் கூறப்பட்டு, பாயிரப்பகுதி நிறைவு செய்யப்படுகின்றது. இதனையடுத்து எம்பெருமானின் திருத்தலமாகிய கைலைக்குன்றத்தின் பெருமை பேசப்படுகின்றது. இத் தலபுராணம் விசுவேசர் பெருமையைப் பேசுவதையே பொருளாகக் கொண்டதனால் புலவர் சிவாலயப் பெருமையைச் சிறப்புறக் கூறுகின்றார்.

ஆகமமும் அருங்கலையும் வேதந் தானும்
அறிந்துணர்ந்தே அநுபூதி ஞானங் கூடி
மேதகுநற் புண்ணியங்கள் மிகவு மாற்றி
விழைவகற்றித் தவம்பயின்று வீடு கூடல்
ஏதமிலா ஞானியர்க்கே ஏற்ற தொன்றாம்
இவையனைத்தும் நீயறிந்த செய்ததியாகும்.
ஓதவரு மேனோர்கள் சிவாலயத்தே செய்தி யாகும்
உற்றவழி பாடியற்றின் உறுவர் நன்மை (115)

என்ற பாடல் தரும் சிவசிந்தனை பாராட்டிற்குரியது. இந்த நூல் சைவமக்களை சிவவழிபாட்டிற்கு நன்கு ஆற்றுப்படுத்தும் ஒப்பற்ற வழிமுறைகளைக் கூறி நிற்கின்றது.

“பெருகுமன்பு சீலமொடும் அருளாசாரம்
பிறங்குமுப சாரமொடும் உறவு வாய்மை
உருகியருச் சித்தலொடும் அறிவடக்கம்
உயர்ஞான தருமமெலாம் உரிமை யாக்கித்
திருக்கோயில் உள்ளிருக்கும் படிமந்தன்னைச்
சிவனென வே கண்டுணர்ந்து வழிபாடாற்றி
அருட்பேறு பெற்றுய்வர் அகிலத்தோர்கள் (116)
..................................................”

என்ற வரிகள் தரும் நெறிமுறைகள் எமது இளந்தலைமுறையினர்க்கு, நல்வழி காட்டி நிற்கின்றன. இதுவே இத்தலபுராணம் மக்களுக்குக் கூற வந்த ஒப்பற்ற செத்தி எனில் மிகையன்று. அத்துடன் வழிபடும் அடியவர்க்குப் பரமுத்தியை நல்கும் மூர்த்தி தல தீர்த்த விசேடங்களுடன் கூடிய தலங்கள் பற்றிக் கூறப்படுகின்றது. காசி, அயோத்தி, மாயா, துவாரை, மதுரை, அவந்தி, காஞ்சி பற்றிய சிந்தனைகள் மனங்கொள்ளத் தக்கவை. தில்லைத் தரிசனத்தை ஒருவர் தமது வாழ்வில் செய்ய வேண்டுமென ஆற்றுப்படுத்துகின்றார். ஆசிரியர்

இத் தல புராணத்தில் நாம் காணக் கூடிய மற்றுமொரு